ரூபாய்க்குமேல் செலவு ஆகும். ஆகவே, இந்த வேலையைப் பொதுப்பணித் துறைதான் மேற்கொள்ள வேண்டும்.

Bridge near Anchetty

* 295 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a bridge to Doddahalla near Anchetty where people of Natrapalayam area cannot pass in that road in the rainy season; and

(*b*) if so, when it will be constructed ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) அஞ்செட்டி நகரத்திற்கு அருகில் உள்ள தொட்டஹல்லா ஆற்றின் மீது பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு தற்சமயம் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துணைக் கேள்வி இல்லை. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கை

பாண்டிச்சேரி பட்டதாரி ஆசிரியர்களின் சம்பள விகிதம் குறித்த, கல்வி அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது விதி 82-ன் கீழ் மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே, 82-வது விதியின் கீழ் ஒரு அறிவிப்பைச் செய்ய விரும்புகிறேன். நேற்று டாக்டர் ஹாண்டே அவர்கள் பாண்டிச்சேரியில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அப்போது நான் அந்த அரசோடு தொடர்புகொண்டு, தகவல் சேகரித்து, தெரிவிப்பதாகச் சொன்னேன். அதன்படி அந்த அரசுடன் தொடர்புகொண்டு தகவல் பெறப்பட்டது. அதை அவைக்கு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.